சக்ரவர்த்தினி.

" கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி "

VOL-10. தொகுதி-10.	December. டிசம்பர் 1914.	No-5. பகுதி-5.

ஏவாமக்கள் மூவாமருந்து.

இல்லறத்தான் இல்லறவாழ்க்கையில் எவ்வளவு மேம்பாடுடையவனாக விரும்பினும், தனது குறிப்பினையறிந்து தான்விரும்பிய காரியத்தைத் தானிதனைச் செய்யென்று கட்டளை யிடுதற்கு முன்னரேசெய்யும் மக்களையுடையவனாகாதிருப்பின், அவன் வாழ்க்கை பயனுடைய வாழ்க்கையாவதன்றாம். ஒருவனுடைய வாழ்க்கை மேன்மையுறுதற்குக் காரணம் அவனுடைய பிள்ளைகள் அவன் குறிப்பினையறிந்து ஒழுகுதலுமாம். இல்வாழ்க்கைக்கு அணிகலமாக விருப்பவர் நன்மக்களாதலின், அம்மக்களில்லாதிடத்து, இல்வாழ்க்கை சிறந்து தோன்றுவதில்லையாம். தந்தையொருவழியில்ஒழுக, மைந்தர் மற்றொருவழியிலொழுகவுள்ள வாழ்க்கை ஏறுமாறாய வாழ்க்கையாமாதலின், அவ்வாழ்க்கை எஞ்ஞான்றும் துக்கவாழ்க்கையேயாம். தமது தந்தை தாயர் இது செய்யவேண்டுமென்று கருதியுள்ள காரியத்தை அவர்கள் இதனைச் செய்யென்று தமக்குக் கட்டளை யிடுதற்கு முன்னரே அவர்களது முகக்குறிப்பாலறிந்து செய்பவர் தாம் உண்மையாய மக்களாவர்; இம்மக்களையுடையவர்க்கு ஒருவாற்றானுந் துன்பமுண்டாவதில்லையாம்.

தந்தை தாயர் தீவினை குறைதற்பொருட்டு அவர்களைநோக்கி மக்கள் செய்யும் தானதருமங்களால், அவர்கள் நற்கதியடைகின்றனரென்பது நூற்களின் றுணிபாமாதலின், இது செய்யென்று தமது தந்தைதாயர் கட்டளையிடுதற்குமுன்னரே அதனை அவர்குறிப்

பறிந்து செய்கின்ற மக்கள்தாம் தமது தந்தை தாயர்க்கு அவர்களிறந்த பின்னரும் நன்மை செய்தற்குரியவரா யிருக்கின்றனர். இம்மக்களைப் பெறுதற்கு இவர்களது தந்தை யாது தவஞ்செய்தானோவென்று தமது அறிவையும் ஒழுக்கத்தையுங் கண்டோர் கூறுமாறு ஒழுகுகின்ற மக்கள் எப்போதும் தமது தந்தை தாயரின் குறிப்பறிந் தொழுகுகின்றவரா யிருப்பரென்பது சீராமரது சரித்திரத்தையும், வீஷ்மரது சரித்திரத்தையும் உயத்துணர்ந்து நோக்குவோர்க்கு நன்கு விளங்குவதாம்.

சீராமர்க்குத் தசரதமகாராஜா மணிமுடிபுனைய ஏற்பாடுசெய்திருந்தபோது, மந்தரையின் வஞ்சகச் செயலால் கைகேசி நெஞ்சு கலங்கி, தனக்குச் சம்பராசுரயுத்தத்தில் தசரதர் தருவேனென்று கூறியவரங்க ளிரண்டனையும் பெறக்கருதி, தசரதரை நோக்கி முன்னர்த் தாங்கள் தருகின்றேனென்று கூறியவரமிரண்டனையும் தருதல் வேண்டுமென்றாள். அவற்றைப் பெற்றுக் கொள்வாய் என்று தசரதர் கூறினர். முதலாவது வரம் சீராமன் 14 வருஷம் காட்டிற்குப் போகவேண்டுமென்பதாம்; இரண்டாவது வரம் பரதன் மணிமுடி புனைந்து உலகாள வேண்டுவதா மென்று கூறினள் கைகேசி. அவற்றைக்கேட்டுத் தசரதர்பலவாறுகூறினார்; கைகேசி அவற்றிற்கு ஒத்துவரவில்லை. அதனால் அவர் மூர்ச்சையாய் விழுந்துவிட்டனர்; உடனே கைகேசி ஏவலாளர் வாயிலாகச் சீராமரைத் தன்னிடத்திற்கு வருமாறு செய்து, அவரை நோக்கி,

“ ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைகளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பினன் அரசன் ”

என்று கூறினாள். உடனே, சீராமர் ஒரு சலக்கமுமின்றித் “தந்தைசொன்மிக்க மந்திரமில்லை” என்று பெரியாரருளியிருப்பதனைத் தம்முளத்தெண்ணி அவர் தம்மை யழைத்து நீ 14 வருஷம் வனஞ்சென்றுவரக் கடவாயென்றுகூறுவதற்கு முன்னே, அவர் குறிப்பறிந்து காட்டுக்குச் சென்றனரென்று இராமாயணங் கூறுகின்றதன்றோ?

சந்தனு மகாராஜா ஸத்தியவதியை மணம்புரிய விரும்பிய போது, அவர் புத்திரராகிய காங்கேயர் அவர் குறிப்பறிந்து,

ஸத்தியவதியின் தந்தையினிடத்துச் சென்று யான் விவாகஞ் செய்து கொள்வதில்லை யென்று உறுதிப்பாடு செய்துகொண்டு

" விரதமுற் றியவா தனைவருங் கேண்மின்
மெய்யுயிர் வீடுமன் றளவும்,
சரதமுற் றியமெய்த் தாதுவு மூலத்
தழலுடன் மீதெழுந் தகைத்தே,
இரதமுற் றியசொன் மகப்பெறு தவருக்
கில்லையென் றியம்புநற் கதியும்,
சுரதமுற் றியவென் றந்தைதன் பொருட்டாற்
பெறுவலென்று. "

என்று கூறிப் பயங்கரமாய விரதமுடையவனெனப் பொருள் படும் பீஷ்மனென்னும் பெயரைப் பெற்றனனென்று பாரதங்கூறு கின்றதன்றோ ?

இச்சரித்திரங்களால் யாது விளங்குகின்றது ? ஏவாமக்கள் மூவாமருந்து (இதனைச் செய்வீராகவென்று தமது தந்தை தாயர் ஏவாமலிருக்க, அவர்தம் குறிப்பறிந்து செய்யுமக்கள் அவர்களுக்கு மூத்துக்கெடாமைக்குக் காரணமாகிய அமிர்தம்போலாவர்) என்பதன்றோ விளங்குகின்றது ?

தந்தை தாயர் இது நன்மையைத் தருவதென்று சொல்லவும் அதனைச் செய்யாத மக்கள் அவர்களுக்கு விஷம்போலத் தீமையே செய்தற்குரியவராவர். தந்தை தாயர் இது நன்மைதருவதென்று சொல்லவும் அதனைச் செய்யாத மக்கள் தாமே இது நன்மை தருவதென்றுணர்ந்து, அதனைச்செய்வதுஒருவாற்றானுமில்லையாம். இம்மக்கள் நிலத்திற்குப் பொறையாயிருக்கின்றன ரன்றி, இவர்வாயிலாக ஒரு நன்மையு முண்டாவதில்லையாம்.

இது செய்யென்று தமதுதந்தை தாயர் ஏவுதற்கு முன்னமே அவர்தம் குறிப்பினையறிந்து, வித்தியாப்பியாசம் செய்தல், நல்லாரோடிணங்கி பொழுதுதல், சன்மார்க்கத்திற் சென்று பொருள் தேடுதல், தமது பெரியோர்கள் செய்த தருமங்களை மறவாது செய்தல், துன்மார்க்கத்தில் மறந்துஞ் செல்லாதிருத்தல் முதலிய உத்தமகுணங்களை யுடைய மக்கள் தம் தந்தை தாயர்க்கு அமிர்தம் போல விருப்பர்; மேற்கூறிய குணங்களுக்கு மாறாய குணங்களையுடைய மக்களோ தந்தை தாயர்க்கு விஷம்போல

விருப்பர். இம்மக்களினிருப்பால், அவர்களுக்கு இகபர மிரண்டிலும் நன்மையுண்டாவதில்லையாம்; தீமையுண்டாவதோ தவறுவதில்லையாம்.

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொரு பிதா,
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
சார்ந்தசற் குருவொருபிதா,
அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாநல்ல
வாபத்து வேளைதன்னில்,
அஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா
அன்புள முனொருபிதா,
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
கலிதவிர்த் தவனொருபிதா,
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதியாகும்.

என்று பெரியார் கூறுவதால், தம்தந்தை தாயர்க்கேயன்றித் தம்மை வளர்த்தவர் முதலாயினோர்க்கும் அவர்க்கு வேண்டியவற்றை அவர்கள் கூறுவதற்கு முன்னரே அவர்கள் குறிப்பறிந்து செய்தல் வேண்டும். இவ்வாறெல்லாம் செய்கின்ற மக்கள்தாம் அமிர்தம்போன்றவராவர்.

நல்வினத்தோடு சேர்தல், இன்சொற் கூறுதல், இரப்பவர்க் கில்லையென்னுதீதல் முதலியவற்றையுடைய மக்கள் எஞ்ஞான்றும் தம் தந்தை தாயர்க்கு மாறாக வொழுகுவதில்லையாம். அவர்கள் எஞ்ஞான்றும் தம் தந்தை தாயர்க்கு வேண்டியவற்றை அவர் தம் குறிப்பறிந்து அவர் கூறுதற்குமுன்னே செய்வதன்றி, கூறியபின் செய்வதேயில்லையாம். தந்தை தாயர் கூறியதை அசட்டை செய்தொழுகுமக்களோ

"கல்லென்று தந்தை கழற வதனையோர், சொல்லென்று கொள்ளா திகழ்ந்தவன்—மெல்ல, எழுத்தோலை பல்லார்முன் னீட்டவினியா, வழுக்கோலைக் கொண்டு விடும்"

என்று நாலடியார் கூறுவதற் கிலக்கியமாகி, அவமானமடைதல் திண்ணமாம்.

தம் தந்தை தாயாது சொல்லுக்கெதிர்த்துப்பேசாது, அவர்கள் தவறுநோக்கித் தண்டித்தவிடக்து, அவர்களை நிந்தியாது அவர்கள் குறிப்பினை யறிந்து, அக்குறிப்பின்படி யொழுகுகின்ற பிள்ளைகள் நன்மையென்றுசொல்லப்படுவன வனைத்தும் பெறுதல் நிச்சயமாம். அவர்கள் தமது தந்தை தாயர்க்கு எப்போதும் அமிர்தம் போன்று நன்மையே செய்தற்குரியவரா யிருக்கின்றனர்.

விடியற்காலத்தில் விழித்துக்கொள்ளும்போது தாம் செய்யவேண்டிய தருமத்தைப் பற்றியும் தேடவேண்டிய பொருளைப் பற்றியும் சிந்தனைசெய்து, தமது தந்தை தாயரைத் தொழுதுகொண்டே யெழுந்திருக்கும் மக்கள் தமது தந்தை தாயர் குறிப்பினையறிந்து, அவர்க ளிது செய்யவேண்டுமென்று கட்டளையிடு முன்னரே அதனைச் செய்தலின், அவர்கள் தம் தந்தை தாயர்க்கு எஞ்ஞான்றும் அமிர்தம்போன் றிருக்கின்றனர். இத்தன்மை வாய்ந்த மக்கள் பிறந்தகுடி யோங்கிவளர்வதன்றி ஒருபோதும் குறைவதே யில்லையாம்.

தந்தை தாயர் தம்மக்களைத் தாம் ஏவுதற்கு முன்னரே தாம் கருதியவதனைத் தங்குறிப்பறிந்து செய்துவருமாறு பழக்குவாராயின், அம்மக்கள் எஞ்ஞான்றும் அவர்களுக்கு மூவாமருந்தாக விருப்பார்களென்பதற்கு யாதோர் ஐயப்பாடு மின்றாம்.

“ கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும், மாறாநீர் வையக் கணி ” என்று திருக்குறள் கூறுவது இங்கு நன்குணர்தற் பாலதாம்.

8-ம் பாடம்.

ஆகாரங்களின் போஷண சக்தி.

அடியில் வரையப்பட்டிருக்கும் ஜாப்தாவைக் கவனித்தால், சில உணவுப் பொருள்களின் போஷண சக்தி நன்றாக விளங்கும்.

0 10 20 30 40 50 60 70 80 90 100

மாட்டிறைச்சி	21	5½
மீன்	18½	½
கோழிமுட்டை	12½	12
பால்	3½	9
பாற்கட்டி	34	15
பருப்பு	23	54
அரிசி	6½	78½
ரொட்டி	6	50
உருளைக்கிழங்கு	2	21
கோஸ்கீரை	2½	7

[=====] இது வெடியுப்பின் அளவைக் காட்டுங் குறி.

[————] இது கரியின் அளவைக் காட்டுங் குறி.

[.............] ஜலத்தின் அளவைக் காட்டுங் குறி.

பிரான்ஸு தேசத்திலே ஒரு ராணுவ வீரனுடைய தினசரி உணவு :—

ரொட்டி 2 - இராத்தல் (75 - ரூபா எடை)
மாம்ஸம் (எலும்பில்லாத) 13½ - ரூபா எடை
மாம்ஸம் (எலும்புபட்ட) 22½ - ,, ,,
கீரை, காய், கிழங்கு முதலியன 7½ - ரூபா எடை
அரிசி, பருப்பு முதலியன 2¼ - ரூபா எடை
சர்க்கரை ½ - ,, ,,
காப்பி ½ - ,, ,,

ஜெர்மனி தேசத்திலே, சுகாதார சபையின் சட்டப்படி ஒரு தொழிலாளியின் தின சரி உணவு :—

ரொட்டி	45 -	ரூபா எடை
பால்	37 -	,, ,,
உருளைக் கிழங்கு	30 -	,, ,,
மாட்டிறைச்சி	$11\frac{1}{4}$ -	,, ,,
பருப்பு	$11\frac{1}{4}$ -	,, ,,
அரிசி	3 -	,, ,,
வெண்ணெய் அல்லது கொழுப்பு	$2\frac{1}{2}$ -	ரூபா எடை
பாற்கட்டி	$1\frac{1}{2}$ -	,, ,,

உணவுப் பொருள்களைக் காப்பாற்றுதல் :—

உணவுப் பொருள்களெல்லாம் சுலபமாகக் கெட்டுப்போகும் சுபாவமுடையன. பால் புளித்துப் போகும்; மாம்ஸம் அழுகி விடும்; ரொட்டி பூசு பிடித்து ஊசிப்போகும்; வெண்ணெய் காரலாகிவிடும். உணவுப் பொருள்களிலே அதி ஸூக்ஷ்மமான சில கிருமிகள் உண்டாகி, சீக்கிரமாக விருத்தியாவதே அவ்வுணவுகள் கெட்டுப் போவதற்குக் காரணம். கெட்டுப்போன பதார்த்தங்களை உபயோகித்தல் தவறும். அதனால் சௌக்கியத்துக்குக் கெடுதி நேரிடும்.

ஆதலால் உணவுப் பொருள்களை மிகவும் ஜாக்கிரதையோடு தெரிந்தெடுத்துக்கொண்டு, தோற்றம், வாசனை, சுவை முதலியவற்றால் சந்தேகத்துக் குரிய பதார்த்தங்களைக் கண்டிப்பாகத் தள்ளிவிட வேண்டும்.

நம்முடைய ஆகாரங்களை அநேகமாய் வேகவைத்துத்தான் உபயோகிக்கிறோம். அது மிகவும் நல்லது. அதனால் உணவுப் பொருள்களிலே இருக்கக்கூடிய கிருமிகள் இறந்துவிடும். தவிரவும் நன்றாக வெந்த பதார்த்தம் சுலபமாக ஜீர்ணமாகும்.

9-ம் பாடம்.

ஜீர்ணம் :—

நாம் சாப்பிடும் ஆகாரங்களின் சத்தான பாகத்தை இரத்தமானது சரீரத்தினுடைய ஸகல உறுப்புகளுக்கும் கொண்டு

செல்வதற்கு, அவ் வாகாரங்கள் இரத்தத்தைப் போல திரவமாகி விட வேண்டிய தவசியம்.

ஆகாரங்களை மெல்லுதல்:—

இந்த வேலை வாய்க்குள்ளே நடக்கின்றது. அதைக் கொஞ்சம் கவனிப்போம். உதடுகள் ஒன்றோடொன்று சேர்ந்துகொண்டு வாயை முன் பக்கம் மூடிவிடுகின்றன. பற்கள் ஒன்றையொன்று நெருங்குவதும், ஒன்றோடொன்று விலகுவதுமாக அசைய ஆரம்பிக்கின்றன. அதனால் நாம் புசிக்கும் பதார்த்தங்கள் பற்களின் இடையே அகப்பட்டுநன்றாக மசிக்கப்படுகின்றன. நமது வாய்க்குள், தாடை, நாக்கு, மேல்வாய் முதலிய இடங்களிலே சருமத்துக்கு அடியில் கொடி முந்திரிக் கொலைபோன்ற சில நுட்பமான கிரந்திகள் இருக்கின்றன. நாம் ஆகாரங்களை மெல்லும்போது, அக்கிரந்திகளில் உமிழ் நீர் சுரந்து சிறு குழல்களின் வழியாய் வந்து வாயில் விழுந்துகொண் டிருக்கின்றது. உமிழ் நீர் கலந்த ஆகாரத்தை நாவானது சுறுசுறுப்பாகப் பற்களின் இடையே தள்ளிக்கொண்டே யிருக்கின்றது.

மேற்கண்ட விஷயங்கள் ஸகலருக்கும் புலப்படும். ஆனால் நமக்குத் தெரியாமலேயே வாய்க்குள்ளே ஒரு காரியம் நடைபெறுகின்றது. அஃது ஒரு முக்கியமான ரஸாயன வேலை. உமிழ் நீர் சாதாரணமான வெறும் ஜலமன்று. அது சில உணவுகளை ஜீர்ணமாக்கும் சக்தியுடையது. ரொட்டி, உருளைக்கிழங்கு, அரிசி என்னு மிவற்றின் மாவானபாகத்தை உமிழ் நீர் ஒரு மாதிரியான பாகாக்கிவிடும். அப்பாகு சுலபமாக ஜீர்ணமாகி இரத்தமாகும்.

ஆகையால் போஜன பதார்த்தங்களை வெகு நேரம் நன்றாக மெல்ல வேண்டியது ஒரு முக்கியமான காரியம். அப்போது தான் அவை உமிழ் நீருடன் கலந்து நன்றாக மசியும். அதனாலே தீனிப்பைக்கு வேலை குறையும். மாப்பண்டங்கள் ஜீர்ணமாகும்.

எவன் ஆகாரங்களை நன்றாக மெல்லாமல் சீக்கிரமாகச் சாப்பிடுகின்றானோ அவனுக்கு அவனே சத்துரு. தீனிப்பை சம்பந்தமான அநேக நீண்ட, ஆபத்தான வியாதிகள் உண்டாவதற்கு ஆகாரங்களைச் சரியாக மெல்லாமல் அவஸரத்துடன் சாப்பிடும் வழக்கமே காரணமாம்.

எந்த வயதிலும் மெதுவாக உண்ணும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். சில மாதங்கள் வரையில் கவனித்தால் போதும். எப்படியிருந்தாலும் சிறு பிள்ளைகளுக்கு அவ் வழக்கத்தை உண்டாக்கிக் கொடுக்கவேண்டிய தவசியம்.

ப்ரொபஸர் சுப்ரமணிய ஐயர்,
புதுச்சேரி.

குசேலர் சரித்திரம்.

(முன்தொடர்ச்சி)

கண்ணபிரான் தருமம் தன்னிடத்து நிலைபெற்று விளங்கவும், பாவம் நிலை பெறாது அழியவும் எழுந்தருளி யிருத்தலால், தீவினை சிறிதேனும் நிகழுவதில்லாத அத் துவாரகாபுரி மதிலின் உயர்வாலும் அகழியின் ஆழத்தாலும் பொலிவு பெற்று விளங்குவதைக் குசேல மாமுனிவர் கண்டவளவில், கண்ணபிரானைக் கண்டாற்போல மகிழ்ச்சியடைந்து, அதனால் தமது துன்பம் நீங்குமாறு வேகமாக செல்லத் தொடங்கினர். அவரவ்வாறு செல்லும்போது தமதெதிரே வருகின்ற குதிரைகளுக்கும் யானைகளுக்கும் மாதர்களுக்கும் ஒதுங்கி, முன்னும் பின்னும் திரும்பித் திரும்பிப் பார்த்து, எறும்பு முதலிய சிறு பிராணிகள் தமது காலின் கீழகப்பட்டு, அழியாவாறு கவனித்துக்கொண்டே போவாராயினர். அவர் மரங்களின் நிழலுள்ள வழியாகச் சென்றால் அங்குள்ள சிறு பிராணிகள் தமது காலிலகப்பட்டுச் செத்துப்போமென்று கருதி தமது அங்கைகளைத் தலைமீது விரித்து வைத்துக் கொண்டு கண்ணபிரானைத் தரிசிக்க வேண்டுமென்னும் விருப்பத்தோடு வெயிலுள்ள வழியிலே நடந்துசென்றார்.

அவ்வாறு செல்லும்போது அவர் யானைக்கூட்டங்கள், குதிரைக் கொட்டகைகள், வாட்போர்பயிலும் சாலைகள், தேர்நிலைகள், தாமரைத் தடாகங்கள் முதலியவற்றைப்பார்த்துக்கொண்டே, அத்துவாரகையின் புறநகரையும் இடைநகரையுங் கடந்துசென்று அந்நகர்க்குள் பிரவேசித்து, அந்நகரின் அகழியையும் அரணின்வாயிலையும் கடந்து அங்கு உள்ளே பிரவேசிக்கின்ற ஓரரசனை முன்னே பிரவேசித்துள்ளமற்றோரரசன் எதிர் கொள்ளும்போது, இன்னுமோரரசன் விரைவாகப் பிரவேசிப்பதை அவர்கள் கண்டு எதிர்

16

கொண்டுபசரித்தல் இடையறாது நடைபெறுதலால், ஜனக் கூட்டத்தினின்றும் விலகிக் கரங்களை மேலே தூக்கிக்கொண்டு, உள்ளே செல்லும்போது, யானை, குதிரை, தேர், காலாள் என்னும் சதுரங்க சேனைகள் அங்குப் பகுதி பகுதியாகச் செல்லுதலால், அப் பகுதிக்குத் தக்கவாறு தங்கியும், செல்லுவதற்கு இடம் பெறாது, தாமதித்துத் தாமதித்துச் சென்றார். இவர் செல்லும் வழிகளெல்லாம் ஜனக்கூட்டம் நெருக்கமாயிருந்ததலால், அவர்களணிந்துள்ள மலர் மாலைகள், சாந்து, குங்குமக் குழம்பு முதலியவற்றின் நறுமணம் இவரது கந்தையிற் படிந்து விட்டது; அதனால் அவரது ஆடை நறுமணம் வீசுவதாயிற்று. அப்பால் அக்குசேலர் விலைமாதர் வீதியையும், வேளாளர் வீதியையும், வணிகர் வீதியையும், அரசாவீதியையும் வியப்பாகப் பார்த்துச் சென்று ராஜவீதியிற் பிரவேசித்தார். அவ்வீதியில், முரசு வாத்திய முதலியன முழங்குவன வற்றைக் கேட்டுத் தம்முள்ளே வியந்து, அங்குள்ள மாளிகைகள் முதலியவற்றின் மாட்சிகளை யெல்லாம் கண்டு அதிசயித்து, அங்குச் செல்லுகின்ற வாயிலின் கண், அரசர்கள் நெருங்கிச் செல்லுதலால், அவர்தம் மணிமுடிகள் தம்முள் உராய்தல் காரணமாக அவற்றினின்று விழுந்த பல்வேறு திறத்தனவாகிய இரத்தினங்கள் பருக்கைக் கற்கள் போலுறுத்தலையும், அங்குள்ள மாளிகைகளில் எழுதியுள்ள சித்திரங்களையும், கஞ்சன், சாளவன், சிசுபாலன் முதலிய கொடுங்கோலரசர்களைக் கொன்ற கண்ணபிரானது புகழைப் பாடல்களிலமைத்துப் பலர் இனிமையாகப் பாடிக்கொண்டிருப்பதையும் கண்டு, அத்துவாரகையின் அருமை பெருமைகளை ஆதிசேஷனும் அளவிட்டுரைத்தல் முடியாது; இந்திரனும் தனது ஆயிரங்கண்களாலும் முற்றுப்பெறக் காண்பது முடியாது என்று தீர்மானித்து, இந்நகரம் மாந்தளிர் மேனியிலக்குமி மணாளனாகிய நாராயணன் படைப்புக் காலத்தில் இம்மாதிரியாக துவாரகையெனும் நகரைப் படைப்பாயாக வெனப் பிரமதேவனுக்குக் கட்டளையிட அதனாலவன் தனது கைகளால் படைக்கப்பட்டது போலுமென்றுட்கொண்டுசென்றார். அதனாலவர்க்கு பலகாதவழி நடந்து வந்ததனாலுண்டாகிய வருத்தமும் இளைப்பும் பறந்து போயின; பசியுமொழிந்து போயிற்று; காலில் நீருறியது; மெலிந்தவுடம்பும் காண்பார்க்கு வியப்புண்டமாறு சிறிது பூரித்தது.

அப்பால் அவ்வருந்தவக் குசேலவர் தோற்கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக் கருவி யென்னும் ஐவகை வாத்தியங்களின் முழக்கமும், அரசர்களது வீரக்கழல்களின் ஓசையும், குதிரைகளின் சூர்ப்பும், யானைகளின் நரல்லும், தேர்களின் அரவமும் தம்முள் கூடியெழ, பலவகை யழகோடும் விளங்குகின்ற கண்ணபிரானது திருமாளிகையின் தலை வாயிலை யடைந்து, அத் தலைவாயிலின் பெருஞ் சிறப்பைக் கண்டு மிகுந்த திகைப்பையும் வியப்பையுமடைந்து, இந்த எள்ளிடுதற்கும்இடங் காணோம்; வெகுகாலம் காத்திருந்தாலும் இச்சன நெருக்கம் நீங்குவதரிது; இவ்வாறிருப்பதால் நாம் உள்ளே பிரவேசிப்பது எவ்வாறாம்? நாம் வந்து அநேக நாழிகைகளாயின; உள்ளே போவது முடியாததாக விருக்கின்றது; இனித் தாமதித்தல் தகுதியாகாது; நமக்கு வருவன வருகவென்று துணிந்து, ஓரிடத்திருந்தார். அப்போதங்கு வந்த ஓரரசனைச் சூழ்ந்துள்ள மெய்க் காவலாளர்கள் தமது வாட் படைகளை யுறைகளினின்று முருவி தம்மரசனை நெருங்கிவாராவாறு, அங்கு வருகின்ற பலரைத் துறத்துவாராயினர். அதுகண்டு குசேலர் மிகப் பயந்து நெடுந்தூரம் நீங்கிச் சென்றார். மறுபடியும் அப்பெருந் தவத்தினர், ஒருவாறு தணிந்து, அவ்வாயிலின் ஒரு பக்கத்தில் மெல்ல மெல்ல வந்து சேர்ந்தார்; அவ்விடமோ கண்ணபிரானுக்குத் திறையாக அளந்து தருமாறு பொற்குவைகள் குவித்து வைத்திருந்த இடமா யிருந்தது. அப் பொருள்களைக் காத்துக் கொண்டிருக்கும் வீரர்கள் தம்மருகே ஒருவர் நிற்பது கண்டு, தமது வாட்படைகளை யுறைகளினின்று முருவி யெடுத்துப்படித்து, "இங்கே நிற்கவேண்டாம்; ஓடிப்போ" என்று துறத்தினார்கள். குசேலரோ உடல் நடுங்கி, மனங்கலங்கி ஓடி உயிர் பிழைத்தனர். பிறது அவர் யாமெவ்வாறு உள்ளே செல்வதென்று மிகவும் ஆலோசனை செய்திருப்பாராயினர். அப்போது கண்ணபிரானது திருவருள் வந்தாற்போன்று ஒரு பெருஞ் சேனை தன்னைச் சூழ்ந்துவர ஓரரசன் அங்கு வந்து சேர்ந்தான். குசேலர் அவ்வரசனைக் கண்டு, அவனது சேனையினுட் பிரவேசித்துப் பெருந் துன்பத்தோடு நெருக்குண்டல் முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டு பையப்பைய நடந்து, பின் ஜன நெருக்கத்தி லகப்பட்டதனால் உடம்பு நெருக்கப்பட்டு, நெடுந்தூரம் கால்கள் பூமியிற் படாதிருக்கச் சென்றனர்; சிலவிடத்துத் தொங்க விடுதற் கிடம்

பெருமையால், அவற்றை மேமேலே தூக்கிக்கொண்டு சென்றனர்; இடைவிடாது ஜனங்கள் கைகளால் இடித்தலால் இடிப்புண்டும், சில விடங்களில் வளைந்துசென்றால், தம்முடம்பினின்றும் பெருகுகின்ற வியர்வை நீரில் மூழ்கியும், இந்நெருக்கத்தில் தப்பிப் பிழைத்தது நமக்கிரண்டாவது பிறப்பாமென வருந்தி, அங்குத் துவார பாலர் (வாயிற் காவலர்) நிற்கின்ற விடத்திற் சென்று சேர்ந்தார். (வரும்.)

துருவசரித்திரம்.

(முன் தொடர்ச்சி).

துருவன் தன் அன்னையை வணங்கித் தைரியமாய் வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தவஞ்செய்தற்குரிய இடத்தை நாடிச்சென்றான். அவன்போகும் மார்க்கத்தில் நகரத்திற்கருகாமையிலிருந்த ஓர் உபவனத்தைக்கண்டு அதற்குள்ளே பிரவேசித்தான்; அங்கு மான்தோலை ஆசனமாகக்கொண்டு எழுமுனிவர்கள் வீற்றிருக்கக் கண்டு அவர்களிடம் விரைந்து சென்று அவர்களைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து நின்று அதி வினயத்துடன் அவர்களை நோக்கி, "மகனீயர்களே! பாலனாகிய நான் உத்தான மகாராஜனுக்கு ஸுநீதி வயிற்றிற் பிறந்த மைந்தன்; என்பேர் துருவன். நான் இன்று தங்களைத் தரிசித்ததுபற்றிப் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். என் மனத்திற்கொண்ட கோரிக்கை யொன்றை அடையும்பொருட்டு வீட்டைத்துறந்து தவத்தை மேற்கொள்ள வந்திருக்கின்றேன். இப்போது என் மனம் பெரிய கிலேசத்தினால் தவிக்கின்றது. தங்களைத் தஞ்சமாக அடைந்த என்னைப் பாதுகாக்கவேண்டும் என்று விநயத்தோடு கூறினான். இச்சொற்களைக் கேட்டு அம்முனிவர்கள் பெரிய ஆச்சரியமடைந்து, அச்சிறுவனை நோக்கி, "அப்பா! நாலைந்து வயதுள்ள பாலகனாகிய உனக்குக் கிலேச முண்டாவதற்குக் காரணமென்ன? உன் தந்தை சுகமாக இருக்கின்றமையால் உனக்குக் குடும்பக் கவலை யுண்டாகக் காரணமில்லையே! அல்லாமலும், உனக்கு இவ்வுலகத்தில் கிட்டாதபொருளும் இராதென்பது நிச்சயம்! உன் தந்தை மகாராஜனல்லவா? உனக்குத் தேக உபாதியிருப்பதாகவும் தெரியவில்லை; அப்பனே! அப்படியிருக்க, நீ துக்கத்துடன் புறப்பட்டு எதனைபடைய விரும்பி இங்கே வந்தாய்? சொல்;" என்று வினவினர்.

சிறுவனாகிய துருவன் தன்னை அன்போடு நோக்கி வினவிய முனிவர்களை மீண்டும் ஒருமுறை பணிந்தெழுந்து இரண்டு கரங்களையுங் குவித்தவாறே நின்று "ஐயன்மீர்!" என்று அழைத்தான். அழைத்த அக்கணமே இவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகிற்று; வார்த்தைசொல்ல முடியாமல் விம்மினன். பின்னர் மீண்டும் ஒருமுறை "ஐயன்மீர்" என்றழைத்துக் கண்ணீரைக் கரங்கொண்டு துடைத்துக்கொண்டு பேச நாவெழாமல் தயங்கினன். முனிவர்கள், "அப்பா! வருந்தாதே! ஏன் விசனப்படுகின்றாய்? தைரியமாய்ச் சொல், உனக்கு நன்மையுண்டாகும் என்று கூறத், துருவன் மனந்தேறி, அவர்களை நோக்கி "என் இருதயம் என் அன்னையின் சக்களத்தியாகிய சுருசி கூறிய கடுமொழிகளால் பெரிதும் பேதமடைந்திருக்கிறது; அவள் செல்வச் செருக்குற்று என்னை அவமதித்துப் பேசியதை என்னெஞ்சம் என்றும் மறவாது. என் துயரம் எப்படித் தீருமோ அறிகிலேன்" என்று கூறி ராஜசமுகத்தில் தன் சிறிய தாயாரால் தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தெரிவித்தான்.

இதைக்கேட்ட முனிவர்கள் பெரிதும் வியப்புற்று "என்னென்பது இச்சிறியனுடைய செய்கையை! தன்சிற்றன்னையின் வார்த்தையால் மனக்கிலேசமடைந்து அரசசெல்வத்தை வெறுத்து வந்திருக்கின்றான்! சிறியவராயிருந்தாலும் பெரியவராயிருந்தாலும் தத்தம் மானத்தைக் காக்கவேண்டுமென்று கருதுவது உயர்வான எண்ணமே.

சத்சங்கற்பங் கொள்ளுகின்றவர்கட்குத் தகுந்தவாறு துணிவையும் ஊக்கத்தையும் எங்குந்நிறைந்த இறைவன் தந்தருளுகின்றான்! அவன்செயலை யாரேயறிவர்? இச்சிறுவனைத் தனக்கு அன்பனாக்கிக்கொள்ளத் திருவுளங்கொண்டான்போலும்! ஜகதீசன், இவன் சித்தம் நிர்மலமானது. இவனுக்கு எங்கும் எப்போதும் சர்வமங்களமுண்டாகும். இவன்பால் பகவான் திருவருள் புரிவானென்பதில் ஐயமில்லை" என்றெண்ணி வியப்புற்று இச் சிறுவனை நோக்கி, "நல்லது, அப்பா குழந்தாய்! நீ விரும்புவது என்ன? உனக்கு எங்களால் என்ன உதவி வேண்டும்? அதனைக் கூறுவையாயின் அதற்குத் தக்கவாறு செய்கின்றோம்; விசனப்படாமல் தெரிவி! உன் உள்ளத்தில் தைரியம் என்னும் அரிய துணை

குடிகொண் டிருக்கின்றமையின் உன் மனோபீஷ்டம்நிறைவேறும். "தைரியந் தலைகாக்கும்" என்பது முதுமொழியல்லவா? எந்த ஆபத்து வந்தாலும் தைரியத்தை விடாமல் கடவுளை நம்பியிருந் தால் ஒரு குறைவும் வாராது." என்று கூறினர். முனிவர்கள் மொழிந்த கட்டுரையை உள்ளத்திற் கொண்டு துருவன் கூறுகின் றான்.—

அத்யாயம் - 3.

அரசிளங் குமாரனாகிய துருவன் கைகூப்பியவாறே முனிவரர் களைப் பார்த்து, "தபோதனர்களே! எனக்கு அநுக்கிரகிக்க வேண்டும். எனக்கு இராஜ்யத்தில் விருப்பமில்லை. மற்றும் இந்த மண்ணுலகப் பொருள்கள் ஒன்றிலும் எனக்கு விருப்ப மில்லை. ஓர் உயர்ந்த பதவியை என் உள்ளம் நாடுகின்றது. அந்தப் பதவி இதுவரையில் ஒருவராலும் அநுபவிக்கப்படாத தாக இருத்தல் வேண்டும்; பதவிகளுக் கெல்லாம் இது மேலான தாகயிருத்தல் வேண்டும்; இராஜ்யத்தை என் மனம் சிறிதும் பொருட் படுத்தவில்லை. "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதல்லவா முதுமொழி! என் சிற்றன்னைக்கு நான் இப் போது நன்றியுள்ளவனாயிருக்கின்றேன். அந்த அம்மையாராலன் றோ எனக்கு இந்த எண்ணமுண்டாயிற்று. அந்த அம்மையாரின் உதாசீனமான வார்த்தையா லல்லவா எனக்கு உங்களைத் தரிசிக் கும்படியான பாக்யம் கிடைத்தது. நமக்கு நேருவதெல்லாம் பின் வரும் நன்மைக்கு அநுகுணமாகவிருக்கும்போலும்! முனிபுங்கவர் களே! ஏழையேன்கொண்ட எண்ணம் நிறைவேறுதற்குச் செய்ய வேண்டியதைத் தெரிவித்துக் காப்பாற்ற வேண்டும், கடவுளை நம்பி வீட்டை விட்டுப் புறப்பட் டிருக்கின்றேன். நிர்க்கதி யென்று வெளிப்போந்த எனக்குத் தங்கள் தரிசனம்கிடைத்தது, கடவுள் என்னிடத்தில் இரக்கங் கொண்டிருக்கிறார் என்பதற்கு அறிகுறியா யிருக்கின்றது. அடியேனைக் கடைக்கண் பார்த்து ஆதரிக்க வேண்டுகின்றேன் என்று கூறிப்பணிந்தான்.

இவ்வாறு சிறுவனாகிய துருவன் தன் மனமுருகிப் பிரார்த் திக்கவே முனிவர்களெல்லோரும் அதிகவியப்படைந்து சற்று ஆலோசித்தவாறிருந்தனர். அப்பொழுது மரீசிஎன்னும் முனிவர், "பிள்ளாய்! உன் எண்ணம் மெச்சத்தக்கது. நீநினைத்தபடி உயர்ந்த பதவிஎல்லோருக்கும் கிடைப்பதரிது.யாவர்க்கும் அரிதாகிய ஒன்

றை ஒருவன் அடைய விரும்பினல் அஃது அவனுக்குத் தெய்வ கிருபையினலே சித்திக்க வேண்டுவதாகும். தெய்வத்தின் துணையன்றிச் செய்பவனுக்கு எந்தக்காரியமும் பெரிதாகாது. "அவனன்றி ஓரணுவுமசையாது" என்பர் பெரியர். ஆகையால் யாவற்றுக்கும் காரணபூதராக விருக்கும் ஏகநாயகனுகிய ஸ்ரீ மகா விஷ்ணுவைச் சரணமாக அடைந்து அவனுடைய திருவருளைப் பெற முயலுதல் வேண்டும். அவனுடைய திருவருளைப் பெறுவாயாயின் நீ எண்ணியபடி அந்தப் பதவி உனக்குக் கிட்டாமற்போகாது. கிடைத்தற்கரிய அச்செல்வம் உனக் குண்டாகட்டும். அப்பனே நீ முயற்சி செய்! "முயற்சி திருவினையாக்கும்". முயற்சியே எதற்கும் முதலாவது துணையாகும். அதைக்கொண்டு மற்றெல்லாவற்றையும் சாதித்தல் கூடும் என்றார். அப்பால் அத்திரி என்னும் மகரிஷி துருவனை நோக்கி 'நல்லது குழந்தாய்! ஸ்ரீமந் நாராயணன் திருவருள் எவனுக்குக் கிடைக்குமோ அவனுக்குத் தான் சர்வாபீஷ்டமும் சித்தியாம். ஆகையால் நீ மரீசி முனிவர் கூறியபடி விரைவில் முயற்சி செய்" என்றார். இதின் பின்னர், ஆங்கிரசரென்பவர், கருதியபடி முடிப்பதற்குக் கவனஞ் செலுத்துகிறவனுகத் தம்முன் நின்றுகொண்டிருக்கும் சிறுவனை நோக்கி "அப்பா! இறைவன் உனக்கு உன் எண்ணப்படி நல்ல பதவியை யளிப்பார்; உன் சித்தம் சிதம்பரமாகவிருக்கின்றது. உனக்குத் தெய்வ கிருபை யுண்டாவதில் ஐயமில்லை. உலக ரக்ஷகனுகிய மாதவன் திருவடிமலரைத் தஞ்சமென்றடைந்து தவஞ் செய்; அவன் பக்தவத்ஸலன்" என்றார். புலகர் என்னும் ரிஷிபுங்கவர், 'அப்பா! குழந்தாய்! நீ சிறுவனுயினும், உன் மனம் மேலான பதவியைப் பெறுவதில் நாட்டங்கொண் டிருக்கின்றது. புருஷராய்ப் பிறந்தவர் என்று மழியாத புகழ் உலகத்தில் உண்டாகும் படியான வழியைத் தேடவேண்டும். இதற்குப் பகவதநுக்ரகம் வேண்டும். ஆகையால், தன் திருவடி பணியும் அன்பர்க்கு அன்பனுய் அருள் புரியும் அச்சுதனைச் சரணமடைந்து அவன் திருவருளைப் பெறக்கடவாய்! அவனுடைய கருணையுண்டானல் கிட்டாதது முண்டோ' என்றார். கிரது மகாரிஷி என்பவர் பாலன் முகத்தை அன்பொடு பார்த்து, "குழந்தாய்! புருஷோத்தமனும் லோக கர்த்தாவுமான

நாராயணனுடைய திருவருள் கிடைக்கப் பெறின் இவ்வுலகத்திலேயன்றி மற்றும் எவ்விடத்தும் அவனுக்கு அடைதற்கரியதொன்றில்லை என்றார். புலஸ்தியர், என்பவர் சிறுவனைப் புன் முறுவலொடு நோக்கி, மதியூகியே! உன் எண்ணம் நிறைவேறக்கடவது; கோவிந்தனை வழிபட்டார் அநேகர் அவரவர் விரும்பிய பதவிகளையடைந்திருக்கின்றனர். அவன் பக்தருக் கநுகூலன், பரம தயாளு, அவனை எண்ணித் தவம்புரிவது தான் உன் கருத்தையடைதற்கேற்ற உபாயம். அவ்வாறே செய்க'' என்றனர். வசிஷ்டர் என்பவர் "உனக்கு ஸர்வ மங்களங்களையும் பகவான் கொடுப்பார்! நீ நினைத்தபடி சர்வமும் சித்தியாம். மூவர்க்கும் முதல்வனாகிய முகுந்தனுடைய பாதபத்மம் எந்தப் பதவியையும் அளிக்கும் என்பது ஸித்தம்'' என்றனர்.

இவ்வாறு முனிவர்களெல்லாம் ஒரே படித்தாக மொழிந்த பகவானுடைய திருவருளின் மகிமையைக்கேட்ட துருவன் சித்த முவந்து அவர்களுடைய பாதத்தில் பணிந்தெழுந்து "கருணைக் கடலாக விளங்கும் முனிபுங்கவர்களே! இன்றே என் வாழ் நாள் நன்னாளாயிற்று. தங்கள் தரிசனம் எனக்கு என்று மடையாத மகிழ்ச்சியைத் தருகின்றது. நான் வழிபடவேண்டிய பரம் பொருளை எனக்குத் தெரிவித்தீர்கள். அந்தப் பரம்பொருளை நான் வழிபடுவதெவ்வா றென்பதையுந் தெரிவித்தல் வேண்டும். அவன் என்னை மனமுவந்து அடிமைகொண் டாதரிக்கத் தக்க படி நான் செய்யவேண்டிய தென்ன? இவற்றை உபதேசித் தருளல்வேண்டும். சரணமென் றடைந்த இச்சிறியனைக் காக்கும் கடமை உங்களுடையதேயாம். நான் வீட்டை விட்டுப் புறப் படும்போது என் சிற்றன்னை மீது கொண்ட கோபமே எனக்குத் துணையாய் நின்று இங்கு என்னைக் கொண்டு வந்து சேர்த்தது. கோபம் பொல்லாததென்பர். இந்தப் பொல்லாத கோபமும் இச் சமயம் தங்களுடைய கிருபை பெறுவதற்குத் துணை செய்ததைப் பார்க்கின் இனி எனக்கு நல்ல காலம் பிறக்குமென் றெண்ணுகின் றேன். ஏழைக் கிரங்கித் திருவருள் செய்ய வேண்டும்'' என்று பக்தி விநயத்தொடு கூறி அஞ்சலியஸ்தனாக நின்றான்.

திரு அ. சுப்ரமணிய பாரதியார்.

காரியசித்தியின் இரகசியம்.

சம்ஸ்த ரட்சண அநுராகம்.

(சர்வஜீவதயை).

ஓர் அரசன் வேட்டையாடு நிமித்தம் ஒரு காட்டுக்குச் சென்றான். அவன் வேட்டையாடி வரும்போது ஒரு மிருகத்தைத் தொடர்ந்து செல்லும் அவசரத்தில் தனது பரிவாரங்களினின்றும் பிரிந்துபோனான். அத்தருணத்தில் சூரிய வெப்பம் மிகுதியாயிருந்தமையால் அவனுக்கு மிகுந்த தாகமுண்டாயிற்று. அவன் அருந்தும் நீர் எங்கேயாவது கிடைக்குமோவென்று, அக்காட்டில் தேடிச் செல்லும்பொழுது, ஒரு சிறிய தோட்டத்தைக்கண்ணுற்றான்; உடனே அத்தோட்டத்தில் நுழைந்தான். அந்த வழைத் தோட்டக்காரன் முன் அரசனை எப்போதும் பார்த்திராதபடியாலும் அரசன் வேட்டையாடுவதற்குரிய உடையைத் தரித்திருந்தபடியாலும் அவனை இன்னானென்று தெரிந்துகொள்ளவில்லை. அரசன் தனக்கு மிகுந்த தாகமாயிருக்கிறதென்றும் உடனே ஏதாவது குடிக்கக் கொடுக்கவேண்டுமென்றும் தோட்டக்காரனைக் கேட்டான். உடனே அவன் தோட்டத்திற்குள் நுழைந்து சில மாதுளம் பழங்களைப் பறித்து, அவற்றின் ரசத்தைப் பிழிந்து ஒரு பெரிய கிண்ணம் நிறைய ரசத்தை அரசனுக்குக் குடிக்குமாறு கொண்டுவந்தான். உடனே அவன் அதனை ஒருமிக்கக் குடித்தும், அவனுக்கு முற்றிலுந் தாகந்தீரவில்லை. அரசன் மாதுளம் பழ ரசமடங்கிய இன்னுஞ் சில கிண்ணங்களைக் கொண்டு வரும்படி தோட்டக்காரனைக் கேட்டான். தோட்டக்காரன் அப்படியே அவற்றைச் சித்தஞ் செய்யப் போனான்.

தோட்டக்காரன் தன்னை விட்டகன்ற பின்னர் அரசன் தனக்குள் யோசிக்கலானான். "இத்தோட்டம் மிகவும் செழிப்புள்ளதாக விருக்கிறது. அரை நிமிஷத்தில் இத்தோட்டக்காரன் எனக்கு ஒரு பெரிய கிண்ணம் நிறைய அதி மதுரமான புதிய மாதுளம்பழ ரசத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். இப்படிச் செழித்து ஓங்கி வளருகின்ற இத்தோட்டத்துச் சொந்தக்காரனுக்கு அதிக வரியை விதிக்கவேண்டும்" என்றிவ்விதமாகப் பல எண்ணங்களை எண்ணலாயினன். தோட்டக்காரனோ ஒரு மணி நேரமாயும் அரசனிடம் திரும்பவரவில்லை; அதிக காலதாமத

மாயிற்று. அரசன் ஆச்சரியப்பட்டு, முதல்முதலில் தாகத்துக்கு ஏதாவது கொண்டுவரும்படி கேட்டபோது ஒரு நிமிஷத்துக்குங் குறைவான நேரத்தில் அந்த மாதுளம்பழ ரசத்தைக் கொண்டு வந்தான். இப்போது சுமார் ஒருமணிநேரமாக மாதுளம்பழ ரசத்தைப் பிழிந்தும் கிண்ணம் நிறையவில்லை போலும்! இதற்குக் காரணம் யாது? என்று தன்னுள் ஆலோசிக்கலானான்.

ஒருமணி நேரஞ் சென்றபின் ஒரு கிண்ணம் அரசனுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆனால், பழத்தின் ரசம் கிண்ணம் நிறைய இல்லை அரசன் இப்பொழுது கிண்ணம் நிறைய ரசம் இல்லாததற்கும், முன் கொண்டுவந்தபோது அவ்வளவு சீக்கிரத்தில் கிண்ணம் நிறையக் கொண்டுவந்ததற்குங் காரணமென்னவென்று தோட்டக்காரனை வினவினான். ஞானியாயிருந்த அந்தத் தோட்டக்காரன் பின்வருமாறு சொல்வானாயினன்:—“மாதுளம் பழ ரசம் நிறைந்த முதற்கிண்ணத்தை நான் கொண்டுவரப்போன போது எமது அரசன் அத்தியந்த நல்ல எண்ணங்களுள்ளவராயிருந்தான்; இரண்டாவது கிண்ணத்தைக் கொண்டுவரப்போன போது எமது இறைவனுடைய பட்சமும் கருணையுமுள்ள சுபாவமானது மாறுபட்டிருக்க வேண்டும். இத்தோட்டத்திலுள்ள மாதுளையின் உயர்ந்த தன்மை இவ்வளவு சீக்கிரம் மாறுபாடடைவதற்கு வேறு காரணங் கூற என்னால் முடியவில்லை” என்றான். இதனைக்கேட்ட அரசன் தன்னுள் சிந்திக்கலாயினன்; உடனே தோட்டக்காரன் சொன்னது முற்றிலும்உண்மையெனத் தெளிந்தான்.

அரசன் முதல் முதல் தோட்டத்திற்குள் நுழைந்தபோது அங்குள்ள பிரஜைகளின்மீது அன்புள்ளவனும், தயையுள்ளவனும், கிருபையுள்ளவனும் அவர்களுடைய தரித்திரத்திற்காக அநுதாபமுள்ளவனுமிருந்தான். ஆனால், கிழவனாகிய தோட்டக்காரன் ஒரு கிண்ணம் மாதுளம்பழ ரசத்தை அவ்வளவு விரைவில்கொண்டுவரவே அவ்வரசன்மனம்மாறுதலடைந்தது; எண்ணங்களும் வேறுபட்டன. அரசனிடம் இயற்கை பொழுங்கிற்குஇணக்கியமின்றி முரணுஞ் சுபாவம் ஏற்பட்டது; படவே அதுதோட்டத்திலுள்ள மாதுளம்பழங்களின் இயற்கையையும் மாறும்படி செய்தது. அன்பின் நியதியை அரசன் பங்கப்படுத்தின அந்தநிஷமே

மாங்களும் தம் சாரங்களை அரசனுக்குக் கொடுக்காமல் நிறுத்த ஆரம்பித்தன

இக்கதை மெய்யாயினுஞ்சரி, பொய்யாயினுஞ்சரி, அதுபற்றி நமக்கு அவசியமில்லை. இக்கதையால் கற்பிக்கப்படும் உண்மையோ மறுக்கமுடியாதது. அஃதாவது பிரகிருதியோடு ஒத்துவாழும் பரியந்தமும், இயற்கைப்பொருள்களுள் ஒவ்வொன்றிற்கும் உனக்குமுள்ள ஒற்றுமையை யுணர்ந்து அதன்படி ஒழுகும் பரியந்தமும், உன்னைச் சுற்றிலுமுள்ள ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு விஷயமும், காற்றும் அலையுங் கூட உன் பக்கமாக வந்து உனக்கு அநுகூலத்தை யுண்டுபண்ணுவதா யிருக்கும். எந்த நிமிஷத்தில் நீ அவற்றோடு முரண்படுகிறாயோ அந்த நிமிஷத்தில், உன் சிநேகிதரும் பந்துக்களும் உனக்கு விரோதிகளாவர். அந்த நிமிஷத்தில் உலகமுழுவதும் உனக்கு விரோதமாக வெழும்பி உன்னைச் சின்னாபின்னப்படுத்தும். இத்தெய்வீகமுள்ள அன்பின் நியதியைச் சரியாகத்தெரிந்துகொண்டு இதன்படி ஒழுகல்; அன்பேபகாரிய சித்திக்கு உயிர் நிலையான ஒரு காரணமாகும்.

சந்தோஷ நாதம்பிள்ளை.

பூங்காவனம்.

(முன்தொடர்ச்சி)

ஒருநாட் காலையில், ஜமீன்தாருக்குப் பக்கத்தில் புதினப் பத்திரிகைகளும் கடிதங்களும் வைக்கப்பட்டன; அக்கடிதங்களிலொன்று பிறதேசத்து அரசாங்கத்தாரிடம்இருந்து வந்தாயிருந்தது. அதிலுள்ள சமாசாரத்தை அருட் பிரகாசம் கவனித்தபொழுது அவன் பக்கத்தேயிருந்த பூங்காவனத்தைப்பார்த்தபார்வை தான் சதியாய்ப் பிரியவேண்டிய காலம் வந்துவிட்டதென்பதை உணரும்படி செய்தது. அந்தக் கடிதத்தைப் பிரித்துக் கண்ணுற்ற ஜமீன்தார் அருட்பிரகாசத்துக்குக் கையை நீட்டி, என் செல்வக் குமாரனே! நீ மைசூர் மகாராஜாவுக்கு மந்திரியாக்கப்பட்ட சந்தோஷத்தை நானே உனக்கு முதற் சொல்லுகிறேனென்றார்; அப்பொழுது சிசு பாலன் தம்பீ! நீ உயர்ந்த உத்தியோகத்திலமர்த்தப்பட்ட சந்தோஷ வசனத்தை நானும் கூறுகிறேனென்றான்; பூங்காவனமும் தனுக்குள் பொங்கி வந்த

எண்ணங்களைத் தோற்றாத விதமாப் அடக்கிக் கொண்டு சந்தோஷ வசனங் கூறினாள்; மங்களமும் மற்றை விருந்தினரும் அப்படியே கூறினார்கள். அருட்பிரகாசம் அவரவர்களுக் கேற்ற பதிலுரைத்தான். அப்பொழுது ஜமீன்தார் என் அருமை மகனே! நீ தடையின்றிப் புறப்படும்படி நியமனப் பத்திரத்திற் கண்டிருக்கிறதைக் கவனிக்கவில்லையா? நீ பிரிகிறது எனக்கு அதிகக் கவலையாயினும் பகிரங்கக் கடமைகளில் செல்லுதலைத் தடைபண்ண மாட்டேன். நீ அடுத்த தினமே செலவு பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்றார். அவன் ஒரு விசித்திரமான குரலுடன், ஆம் நாளைக் கென்றான். அதனைப் பூங்காவனம் மாத்திரம் அல்லாமலும் அவர்களின் நேசத்தை அறிந்த சிசுபாலனும் அவதானித்தான். அப்போது மங்களம் காலைப்போசனம் ஆயத்தம் செய்யும் முயற்சியில் நின்றுவிட்டாள். காலைப் போசனம் முடிந்தவுடன் பூங்காவனமும் அருட்பிரகாசமும் தோட்டத்தில் உலாவும்படி சென்றனர். ஜமீன்தார் குமாரனின் நிமித்தம் தான் செய்து கொண்ட வேண்டுகோளுக் கிசைந்த மைசூர் வேந்தருக்குப் பதிற் கடிதம் எழுதும்படி புஸ்தகசாலைக்குச் சென்றனர். புஸ்தகசாலையில் பிரவேசித்தவுடன் தமக்கு விலாச மெழுதப்பட்ட கடிதமொன்றை மேசையின்மீது கண்டார். அது தன்னிடத்துக்குக் கொண்டுவரப் படாமல் ஏன் அங்கே வைக்கப்பட்ட தென்று ஆலோசித்தார். மேல் வாசகத்தி லெழுதப்பட் டிருக்கும் எழுத்து யாருடைய தென்று அனுமானிக்க இயலாமல் வந்துவிட்டது; ஏனெனின், அது இடக் கையால் எழுதப்பட்டிருந்தது. சுருக்கமாய்ச் சொல்லில், அதை வரைந்தவர் தமது கையெழுத்தைமறைக்கும்படி வேண்டுமென்று செய்தாரென்று எண்ணி அக்கடிதத்தைப் பிரித்து இரண்டு வரி வாசிக்கு முன் அது கீழே வீழ்ந்துவிட்டது. அவர் முகம் சவத்தைப்போல் வெளிறி விட்டது. பின்பு பைத்தியம் பிடித்தவர் போல மூர்க்கமாய்க் கதவுப் பக்கமாய் ஓடிப் போய்ச் சடுதியாய் நின்று ஆறுதலடைந்தார். ஆனால், அது பயங்கரமான ஆறுதலாய் இருந்தது. அந்த அமைதி விபரீதமான பயங்கரத்தைக் கொண்டிருந்தது. அவர் அந்தக் கடிதத்தையெடுத்து மீண்டும் வாசித்தார். உள் வாசகம் அதிகமில்லாமலிருந்தும், பயங்கரமான அர்த்தத்தைக் கொண்டிருந்தது. அவர் சிறிது ஆலோசித்து இல்லை அப்படி இருக்கமாட்டாது. இது ஒரு கீழ்த்

தரமான கெட்ட அபவாதமாய் இருக்கவேண்டும். "கையெழுத்தில்லாமல் எழுதுகின்றான், எப்படி அவனை நம்புகிறது". இருந்தும் கடவுளே, அப்படி இருந்து விட்டால் நான் மனிதர்களுக்குள் நிர்ப்பந்தமுடையவனாய் விடுவேன். ஆனால் என்னுடைய பழி வாங்கல் மெத்தப் பயங்கரமாயிருக்கும் என்றும் முறுமுறுத்து அதிக உக்கிரத்தோடு முன்னும் பின்னும் உலாவிச் சடுதியாய் நின்று மீண்டும் ஒரு முறை கடிதத்தைப் பிரித்துப் பார்த்துக் கண்களிற் பொறி பறக்க உதடுகள் படபடக்கும்படி விறைத்துப் போய் நின்றுவிட்டார். அஃது அவர் தம் மனதுக்குள்ளே தீர்மானம் பண்ணினவற்றிற்கு மறுமொழியாய் இல்லை. அது அப்படியிருக்க மாட்டாது. இன்னும் போதிய அத்தாட்சி காணவேண்டுமென்று ஆர்ப்பரித்து மெதுவாகக் கடிதத்தை மடித்து வைத்துக்கொண்டு ஒரு பக்கத்தேயுள்ள பிற்கதவால் மாளிகையினின்றும் புறப்பட்டுத் தோட்டத்துட் புகுந்து மரங்களால் நிறையப் பெற்ற ஒரு கூடலுட் புகுந்தார். சில நிமிஷங்களுக்கிடையில் பூங்காவனமும் அருட்பிரகாசமும் சிறிது தூரத்தில் நடந்துகொண்டு போகிறதைக் கண்டார். அது அவருடைய மனதைத் தாக்கின அநாமதேயக் கடிதத்திற் காட்டிய சந்தேகத்தை நிலை நிறுத்தும்படி அவர்களின் நடத்தைகளிற் தோற்றவில்லை. உடனே அவர்கள் அந்தத் தோட்டத்தின் மூலையாகத் திரும்பினார்கள். அவர்களுக்குத் தெரியாததும் மற்றவர்கள் காணக்கூடாததுமான ஒரு செடிக் கூடலுட் புகுந்து அவர்களின் சம்பாஷணையைக் கவனிக்கும்படி நின்றார். அவர்களும் அதற்குள் யார் பதுங்கியிருக்கிறதென்று சற்றேனும் அறியாதவர்களாய்ச் சில நிமிஷத்தில் அவருக் கருகே வந்தார்கள். அருட்பிரகாசம், அம்மா! நான் நாளை உதயத்தில் காலைப் போசனம் அருந்தினவுடன் புறப்பட்டு விடுவேன். எனது பெரிய தகப்பனார் இந்த உத்தியோகத்தை எனக்குக் கொடுக்கும்படி முயற்சி செய்தது மெத்த நன்மையாயிருக்கிறதென்று கூறப் பூங்காவனம், அது பெரும் நன்மைதானென்றாள். பின்பு சம்பாஷணை நின்றுவிட்டது. அப்படியே அவர்கள் செல்லும் பொழுது மீட்டும் செய்த சம்பாஷணை ஜமீன்தாருக்குக் கேட்கவில்லை. அவர்களின் முகத் தோற்றங்கள் துக்கத்தைக் காட்டினும், அவர் செவிகளுக் கெட்டிய சொற்கள் யாதாவதொரு விபரீதத்

தைக் கொண்டுவரக் கூடியதாயிருக்கவில்லை. ஜமீன்தார் கவனிக்காதிருந்தாலும் அவர்களுக்கு நெருங்கி வருகிற பிரிதலைப் பற்றிக் கம்பீரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். தாங்கள் பிரிந்து விடுகிறது தான் நல்லதென்றும் உணர்ந்தார்கள். ஜமீன்தார் அவர்களின் முகத் தோற்றத்தைக் காணாதவரும் அவர்கள் சம்பாஷணையின் முற்பகுதியைக் கேளாதிருந்தவருமானபடியால், அந்தக் கைச்சாத்தில்லாத கடிதத்தின் ஏவுதலினால் தான் வீண் சந்தேகத்துக்கு இடங்கொடுத்தமை பற்றி வியாகூலப் பட்டு, சுபாவத்திலேயுள்ள பெருந் தன்மையினால் மனந் திரும்பினவராய் மறைந்திருந்த இடத்தை விட்டுச் சுற்றுப் பாதையாய்மாளிகைக்குச் சென்றனர். எப்படியிருந்தாலும் அவருடைய மனதுக்குள் கரவென்னும் பசாசு குடி கொண்டுவிடவே நினைத்தபடியும் அவாக் கொண்டபடியும் பொறாமை என்னும் பசாசை அகற்ற முடியாமல் வந்துவிட்டது. அவர் தம்மை ஆறுதற்படுத்தப் பிரயத்தனப்பட்டார். ஆனால் அது அவரால் முடியாமல் வந்து விட்டது. அவர் அமைதியும் ஆறுதலு மற்றவரானார். மற்றை மணித்தியாலத்துக் கிடையில் இருபது தரம் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தார்; தான் அப்படிச் செய்தே னென்று சற்றேனும் காட்டாதபடி மத்தியான போசனம் அருந்தும் பொழுது அருட் பிரகாசமும் பூங்காவனமும் நடந்து கொள்வதை பிரதானமாய்க் கவனித்தார். அவருடைய கவனிப்பு இப்போது கூடாமையாய் வந்துவிட்டது.

போசனம் முடிந்தவுடன் சிசுபாலன் ஓடம் விடும்படி எத்தனித்தான். அங்குள்ளவர்களனைவரும் சம்மதங் கொடுத்தனர். மறுபடியும் ஜமீன்தார் பத்தினியையும் மகனையும் கவனித்தபடியே யிருந்தார். நாலுமணியளவில் சிசுபாலனும் அவனது கூட்டத்தாரும் ஓடத்தை விட்டு மாளிகை சென்றனர். ஜமீன்தார் வாசகசாலைக்குச் சென்றனர். அது தோட்டத்தின் காட்சிக் கெதிராயிருந்தது. உடனே பூங்காவனமும் அருட்பிரகாசமும் மீட்டும் தனிமையாய் உலாவிச் செல்வதைக் கவனித்து மறுபடியும் புறக்கதவால் வெளிவந்தனர். அன்று இன்பமான சாயங்காலமாயிருந்தது. பிள்ளைத் தென்றலும் வீசியது. அப்பொழுது 'அருட்பிரகாசம் அவளின் கையைப் பிடித்தான். அந்தச் சமயத்தில் ஒரு சிங்கத்தின் கர்ச்சனையைப் போல ஒரு த்தம் இவர்க

ளின் காதுகளுக் கெட்டியது. அருட்பிரகாசம் அவளின் கையைவிட்டு நாற்புறமும் பார்த்தான். அப்போது தான் ஒரு மறைவான இடத்தினின்றும் வெளிவரும் ஜமீன்தாரை இரு வரும் கண்டார்கள். அவருடைய தொனிக்குத் தக்க மாதிரி யாய் மிருகத்தைப் போலப் பாய்ந்து வந்தார். பூங்காவனம் உடனே துக்கத்தின் அரைத் தொனியோடு அறிவு கெட்டுக் கீழே வீழ்ந்தாள். அருட்பிரகாசம் அவளைத் தன் கைகளாற் றூக்கி நிறுத்த யத்தனித்தான். அவர் உக்கிர கோபத்துடன் சீறி, பழிக்கஞ்சாத துரோகியே! அவளை விட்டு வெளியிற்போய் விடடா வென்று கூறினர். அவன் வணக்கத்துடன் பெரிய தந் தையே! சொல்வதைக் கேளுங்கள்; ஐயோ! எனக்காக வல்லா விட்டாலும் தங்கள் பத்தினியாருக்காகவாவது நான் சொல் வதைக் கேளுங்கள்; என்று எழுத்திற் காட்டமுடியாத விதமான மன்றாட்டத்தோடு கேட்டான். அவர் துரோகியே! வெளியே போய்விடெனக் கர்ச்சித்தார். அச்சமயத்தில் வேறு பக்கத்தில் நின்று ஜமீன்தாரின் கர்ச்சனையைக் கேட்ட இரு பணிப்பெண் கள் அவ்விடத்து வந்து தோன்றினர். பூங்காவனம் மயக்குற் றிருப்பதையும் அருட்பிரகாசம் வெளுப்புடன் நடுங்கிக் கொண்டு நிற்பதையும் கண்ட அப் பெண்கள் மலைத்துப்போய் நின்றார்கள். அப்பொழுது ஜமீன்தார் உங்கள் எசமானியைத் தூக்கிக்கொண்டு போய் அவளின் தாதிகள் வசம் ஒப்புவியுங்கள் என்று கட்டளை யிட்டார்.

அவ்விரு பெண்களும் எசமானின் கட்டளைக் கமைந்தவர்க ளாய்ப் பூங்காவனத்தைக் காவிக் கொண்டுபோம்பொழுது ஜமீன் தார் திரும்பி அவர்கள் பின் சென்றனர். அப்பொழுது அருட்பிர காசம் அவரது கால்களைப் பிடித்துக்கொண்டு பெரிய தந்தையே! கடவுளுக்காக நான் சொல்வதைக்கேளுங்கள் என்று மன்றாடினன். ஜமீன்தார் ஒரு சொல்லும் வேண்டா மென்று கோபங் கொண் டவராய்த் தன் மகனின் கன்னத்தில் ஓங்கி அடித்தனர். உடனே அந்த வாலிபன் முகஞ் சிவந்து கோபாவேசங் கொண்டவனுயி னும், தான் பெற்றுக் கொண்டதற்குப் பிரதி பலன் அளிக் காது பொறுத்துக்கொண்டு உடனே சடுதியில் திரும்பிப் போகும் பொழுது அந்தக் கூடலின் முடிவில் தன் தமையனுகிய சிசு பாலனைச் சந்தித்தான். அவன் சகோதானின் பயங்கரமான முகக்

குறிப்பைக் கண்டு தம்பீ! அருட்பிரகாசமே! என்ன நடந்தது சொல்லென, அவன் அண்ணாவே! சில பயங்கரமான சம்பவங்கள் நடைபெற்று விட்டன. பெரிய தந்தையார் எசமானியைக் குற்றவாளியென் றெண்ணுகின்றார். கடவுளுக்காக அவரிடத்திற் போய் அவன் ஒருகாலத்தும் பொய் சொல்லான், அவள் குற்றவாளியல்ல வென்றதை அறிவித்து விடுங்கள். என் அருமைச் சகோதரரே! என்ன சம்பவித்தாலும் கடவுளுக்காக எசமானியை மீட்டுவிடுங்கள் என்று படபடப்பாய் மொழியச் சிசு பாலன் தம்பீ! என்ன சம்பவித்ததுசொல்; உனக்கு நன்மைதரும் செய்கையை நான் செய்வேனென்றது உனக்குத் தெரியாதா? என்றான். அருட்பிரகாசம் அண்ணா! அந்தக் கதை சொல்வதுமுடியாது; அது ஒவ்வொரு நிமிஷமும் சீவனைப்போல் விலை ஏற்றப்பட்டதாயிருக்கின்றது. சீக்கிரம்போய் அவரைக் கண்டு அவள் குற்றமற்றவளென்று சத்தியம்செய்யுங்கள்; மன்றாடிக் கேட்கின்றேன் என்று ஆத்திரமாகக் கூறினான். அப்பொழுது சிசு பாலன் தம்பி! நீ மனக் குழப்பமாய் நிற்கிறாயென்று தோற்றுகின்றது. மறுபடி உன்னை நான் எங்கே காணலாம் என்றான். என்னைக் காண்கிறதா வென்று சொல்லியபடியே ஆலோசித்து ஆம் ஆம்! மறுபடியும் தங்களைக் காணத்தான் வேண்டும்; பெரிய தந்தையார் திருப்தி கொண்டாரென்ற நிச்சயம் நான் அறியவேண்டும். எங்கே சந்திப்போம்; அங்குத் திரும்பி வரமாட்டேன், கங்கா சத்திரக் கிளப்பில் நான் காத்திருப்பேன் என்று அருட்பிரகாசம் சொன்னான். சிசுபாலன் அங்ஙனமே செய்வதாக வாக்களித்துத் திரும்ப அருட்பிரகாசம் கங்கா சத்திர வாடி வீட்டுக்குச் சென்றான்.

எட்டாம் அதிகாரம் முற்றிற்று.

மா. சிவராவலிங்கம் பிள்ளை.